

# செங்காந்தள் - வழிபாடு

முனைவர் ஆ. மகாலட்சுமி

Title Verso

TITLE OF THE BOOK : Chenkaantal - Vazhibadu

புத்தகத்தலைப்பு : செங்காந்தள் - வழிபாடு

EDITOR : Dr. A. Mahalakshmi

தொகுப்பாசிரியர் : முனைவர் ஆ. மகாலட்சுமி

FIRST EDITION : 2023

முதல் பதிப்பு : 2023

PAGES/ பக்கங்கள் : 124

PRICE/ விலை : 350

ISBN NUMBER : 978-93-91115-95-1

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001.
Tamil Nadu

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Rear side,
Virudhunagar – 626001.
Tamil Nadu

பதிப்புரிமை/Copyright © 2023 – கட்டுரையாளர்களுக்கு /Authors'

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1. | பிள்ளைத்தமிழ் கூறும் வழிபாட்டு முறைகள்<br>திருமதி ந. தமிழரசி<br>முனைவர் ஆ. மகாலட்சுமி | 1-33 |
| 2. | பாரதியார் கவிதைகளில் வழிபாடுகள்<br>செ. பவித்ரா<br>முனைவர் ஆ. மகாலட்சுமி | 34-69 |
| 3. | சிலம்பு உணர்த்தும் வழிபாட்டு மரபுகள்<br>முனைவர். வெ. பிரபாவதி | 70-97 |
| 4. | சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புறத் தெய்வவழிபாடு<br>முனைவர் அ.மகபுபூ | 98-124 |

# சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புறத் தெய்வவழிபாடு

முனைவர் அ. மகபுபூ, உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை,
என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-4761-4707
DOI: 10.5281/zenodo.7776988

## ஆய்வுச்சுருக்கம்

தேசியக்காப்பியம், முத்தமிழ் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்ற சிறப்புகளை உடைய சிலப்பதிகாரத்தில் நாட்டுப்புறக்கூறுகள் நிறைந்துள்ளன. சிலம்பில் சிறுதெய்வ வழிபாடுகளும் பெருந்தெய்வ வழிபாடுகளும் காணப்படுகின்றன. அவற்றில் சிறுதெய்வ வழிபாடான நாட்டுப்புற வழிபாடு போன்று சூரியன், சந்திரன், தீக்கடவுள், சதுக்கபூதங்கள், வர்ணபூதங்கள், வனதேவதை, கொற்றவை, ஐயை, இயக்கி போன்றவைகள் பற்றியச் செய்திகளை நாட்டுப்புற தெய்வங்களுடன் ஒப்பிட்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**குறிப்புச்சொற்கள்:** சிலப்பதிகாரம், நாட்டுப்புறத் தெய்வம், தெய்வவழிபாடு.


ISBN Number: 978-93-91115-95-1

**முன்னுரை**

நாட்டுப்புற வழிபாடுகளும் தெய்வங்களும் தோன்ற நாட்டுப்புற மக்கள் தங்களுக்கு மேலான ஆற்றலுடைய வல்லமை பெற்ற சக்தியிருந்ததாக நம்பினர். அச்சக்திதான் மக்களையும் இந்த உலகத்தையும் இயக்கிக் கொண்டிருக்கின்றது என்ற உணர்வுடன் வாழ்ந்து வருகின்றனர். இவ்வுணர்வு என்று நாட்டுப்புற மக்களின் உள்ளத்தில் தோன்றியதோ அன்றைக்கே வழிபாட்டுச் சிந்தனைகள் வளரத் தொடங்கின. தொடக்கக் காலத்தில் இடி, மின்னல், மழை, பூகம்பம், தீ போன்ற அச்சம் தரும் நிகழ்வுகளைக் கண்டு பயந்து இவற்றுக்குக் காரணம் உலகின்கண் உலவுகின்ற எண்ணற்ற ஆவிகளே என நம்பினர். அந்த ஆவிகளின் சினத்தைத் தணிக்க அவற்றைத் தேவதைகளாக எண்ணி வழிபட்டனர். மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றை வணங்க வேண்டும் என்று எண்ணிய நாட்டுப்புற மக்கள் காலப்போக்கில் உருவ கடவுள் கோட்பாட்டையும் உருவாக்கினார்கள். இவ்வாறான வழிபாட்டையும் வழிபாடுகளும் தெய்வங்களும் நாட்டுப்புற வழிபாடுகளும் தெய்வங்களும் சிலப்பதிகாரத்தில் பெரும்பாலான இடங்களில் காணப்படுகின்றன. அவற்றை நாட்டுப்புற

ISBN Number: 978-93-91115-95-1

நாட்டுப்புற வழிபாட்டில் இன்றளவு பல பரிமாணங்களில் வணங்கி வரும் சூரிய வழிபாடு, உலக வரலாற்றை நோக்குங்கால் உலகம் முழுமையும் பன்னெடுங் காலமாகப் பல்வேறு இன மக்களிடையே இருந்தது. மேலும் வேதகாலம், மகாபாரத காலம், இராமாயண காலம் ஆகிய மூன்று காலங்களில் வாயிலாக சூரிய வழிபாடு வழக்கில் இருந்ததையும் அறிய முடிகிறது.

"கணபதி வழிபாடு அல்லது பிள்ளையார் வழிபாடு தமிழகத்தில் பரவுவதற்கு முன், ஒவ்வொருவரும் ஒரு பணியை ஆரம்பிக்கும் முன் சூரியனை வணங்க ஆரம்பித்தனர் என்று அறிஞர்கள் கூறுவார்கள்" என்கிறார். முனைவர். அழகு கிருஷ்ணன் (சிலப்பதியாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும் ப.283).

சிலப்பதிகாரக் காலத்தில் கணபதி வழிபாடு பரவவில்லை ஆகவே தான் காப்பியத் தொடக்கம் ஞாயிறு வழிபாட்டுடன் ஆரம்பிக்கிறது. மணிமேகலையின் பதிகமும் ஞாயிறு வழிபாட்டுடன் தொடங்குகிறது. மேலும் சிலப்பதிகாரக் காலத்தில் சூரியனுக்குத் தனியாகக் கோவில் இருந்தது அது 'உச்சிக் கிழான் கோட்டம்' என அழைக்கப்பட்டு வந்தது. சூரியனுடைய தேருக்கு ஒரே உருளை எனவும் அது எழு குதிரைகளால் இழுக்கப்பட்டது எனவும் குறிப்பிடுவார் இளங்கோவடிகள். இவ்வாறு

ISBN Number: 978-93-91115-95-1